


# இராமேஸ்வரம் புனித நீர் தீர்த்தங்களை மீட்டெடுக்கும் செயல் திட்டம்

சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஜெயந்தி ஆண்டை அதற்குரிய விதத்தில் கொண்டாட கன்யாகுமரியில் உள்ள விவேகானந்த கேந்திரம் பல திட்டங்களை அறிவித்துள்ளது. சுவாமி விவேகானந்தர் காண விரும்பிய புத்தெழுச்சியுடன் விழித்தெழுந்த இந்தியாவினை நோக்கி சமுதாயத்தை செலுத்தும் செயல் திட்டங்களாக இவை அமைந்துள்ளன.
விகே நார்டெப் என பரவலாக அறியப்பட்டுள்ள விவேகானந்த கேந்திரத்தின் இயற்கை வள அபிவிருத்தி திட்டமும் இப்பெரும் இயக்கத்தில் ஒருகிணைந்த ஒரு பிரிவாகும்.

சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஜெயந்தி ஆண்டை கொண்டாட ராமேஸ்வரத்தில் உள்ள புனித நீர் தீர்த்தங்களில் மிகவும் மோசமான நிலையில், மாசடைந்து பாழான சூழலில் கவனிப்பாரற்று உள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து மீட்டு மீண்டும் புனித யாத்திரீகர்கள் வரும் தலங்களாக மாற்ற விகே நார்டெப் முடிவெடுத்துள்ளது.

இராமேஸ்வரம் இந்தியர்களின் மனதில் ஒரு தனித்துவமுடைய புனித இடத்தைப் பெற்றுள்ளது. அது பன்னெடுங்காலமாக ஒரு முக்கியமான புண்ணிய யாத்திரை திருத்தலம் என்பது ஒரு முதன்மை காரணம். அத்துடன் தமது வெற்றிகரமான மேற்கத்திய திக் விஜயத்தை முடித்துவிட்டு பாரதம் திரும்பிய சுவாமி விவேகானந்தர் இங்கு தான் முதன் முதலில் தனது காலடியை பாரத மண்ணில் எடுத்து வைத்தார் என்பது மற்றொரு முக்கிய காரணம் ஆகும். எனவே பண்டைய பாரதத்தின் புராதன பண்பாட்டு பெருமையுடன் நவீன பாரதத்தின் சமுதாய பண்பாட்டு விழித்தெழுதலையும் இசைவிக்கும் ஒரு புனித தலமாக ராமேஸ்வரம் விளங்குகிறது.

எனவே இந்த ராமேஸ்வர தீர்த்த தலங்களை மீட்டெடுக்கும் செயல் திட்டமானது புண்ணியமானது என்பதுடன் புனித சின்னம் என்பதாகவும் விளங்குகிறது. இது சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் தொடர்புடையது, இந்த புண்ணிய தீவில் வாழும் மக்களது சமூக பொருளாதார மேம்பாட்டை உருவாக்குவது.... இந்த செயல்திட்டத்தின் மூலம் இங்கு தீர்த்த யாத்திரை வரும் புனித யாத்திரையாளரின் அனுபவம் ஒரு பரிபூரண ஆன்மிக அனுபவமாக அமையும் என்பதிலும் ஐயமில்லை.

Wake Up Bharat ! Enlighten The World !!

150

1863-2013

Birth Anniversary of Swami Vivekananda

## சுவாமி விவேகானந்தர்

நடைமுறை வேதாந்தத்தை முழங்கிய துறவி. மானுடத்துக்கு செய்யும் சேவையே இறைவனுக்கு செய்யும் ஆன்மிகத் தொண்டு எனக் கூறிய மகான் சுவாமி விவேகானந்தர். சுவாமி விவேகானந்தரே நவீன பாரத வரலாற்றில் இந்த தேசம் மேன்மையடைய வீழ்ந்து கிடக்கும் நம் தேச மக்களை மேம்படுத்த வேண்டும் என்று கூறிய முதல் ஆன்மீக மகான் ஆவார். கோடிக்கணக்கான மக்களின் வீழ்ச்சியாலேயே தேசம் கீழ்நிலை அடைந்தது எனக் கூறினார் அவர்.

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வ தேச சமய மாநாட்டில் பாரத தேசம் அளித்த மனிதகுல ஆன்மநேய ஒருமைப்பாட்டின் செய்தியை வெற்றிகரமாக முழங்கிய சுவாமி விவேகானந்தர் பாரதத்தில் நடைமுறை வேதாந்தத்தை ஓய்வின்றி தொடர்ந்து பரப்பினார்.

நம் தேசத்தில் வீழ்ச்சியடைந்து தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ள மக்களுக்காக உழைப்பதும் பாடுபடுவதுமே ஒரே உண்மையான இறைவழிபாடு என ஆன்மிகத்துக்கு ஒரு புத்துயிரை அவர் புகட்டினார். இந்த தேசத்தின் இதயத்தை அவர் தட்டி எழுப்பி மானுட சேவையே மகேசன் சேவை என எடுத்துரைத்தார். அவருடைய உணர்ச்சி பொங்கும் இதய பிரவாகத்திலிருந்தே இந்த தேசத்தின் விடுதலை இயக்கங்களும் சமூக சீர்த்திருத்த இயக்கங்களும் அலை அலையென உருவெடுத்து பெருகின.

நன்றி உணர்ச்சியுடன் இப்பெரும் மகானின் 150ஆவது பிறந்த தினத்தை இந்த தேசம் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறது. தேசபக்தியும் தத்துவ ஞானமும் மானுடத்துவமும் கொண்ட இப்பெரும் துறவி இந்த தேசத்தை உயர்விக்க வந்த மகான் ஆவார்.

எல்லா வழிபாடுகளின் சாராம்சமும் இதுவே தான். தூய்மையாக இருங்கள். அனைவருக்கும் நன்மை செய்யுங்கள். ஏழைகளிலும் வலிமையற்றோரிலும் நோயுற்றோரிலும் யார் சிவனை காண்கிறாரோ அவரே சிவனை உண்மையில் வழிபடுகிறவர் ஆவர்.

- சுவாமி விவேகானந்தர்.

# விவேகானந்த கேந்திரம்




முழுமையான வளர்ச்சி அடைந்த புத்துயிர் கொண்ட பாரதமே விவேகானந்தர் கண்ட பாரதத்தின் வருங்காலம் ஆகும். அத்தகைய பாரதத்தை உருவாக்க உழைக்கும் ஆன்மிக தொண்டு நிறுவனமே விவேகானந்த கேந்திரம் ஆகும். எந்த பாறையில் அமர்ந்து சுவாமி விவேகானந்தர் புதிய பாரதத்தை தரிசனமாக கண்டாரோ அதே பாறையில் அமைந்துள்ள அவரது நினைவுச் சின்னத்துடன் இணைந்த உயிருள்ள நினைவுச்சின்னமாக விவேகானந்த கேந்திரம் கன்யாகுமரியில் இருந்து இயங்கி வருகிறது. தேசமெங்கும் 600 கிளைகளுடன் கேந்திரம் இயங்கி வருகிறது. பல சேவை செயல்திட்டங்களை பல தளங்களில் இது செய்து வருகிறது.



கிராம மேம்பாட்டு செயல்திட்டம் பல வளர்ச்சி திட்டங்களை கிராமப் பகுதிகளில் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இச்செயல்பாடு சிறப்பாக உள்ளது. 10,000 க்கும் மேற்ப்பட்ட கிராமங்களில் பண்பாட்டு பொருளாதார சுகாதார வாழ்க்கை அம்சங்களைத் தொட்டு சேவை செய்துள்ள இச்செயல்திட்டத்தினால் கணக்கற்ற பெண்கள், குழந்தைகள், இல்லத்தரசிகள் பயன்பெற்றுள்ளனர்.



அருண் ஜோதி என்னும் செயல் திட்டம் மிக முக்கியமான நமது எல்லை மாநிலமான அருணாசல பிரதேச பூர்வகுடி மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக இயங்குகிறது. இம்மாநில மக்களின் ஆன்மிக பண்பாட்டை அழிக்காமல் அதே நேரத்தில் இவர்களுக்கான சமூக கல்வி வளர்ச்சியை இச்செயல் திட்டம் வழங்குகிறது.




யோகாவை ஒரு வாழ்க்கை முறையாக விவேகானந்த கேந்திரம் மக்களிடம் கொண்டு செல்கிறது – வெறும் உடற்பயிற்சிகளாக அல்ல. பாரதமெங்கும் ஒரு ஆரோக்கியமான உடல் - உள்ளக் கலாச்சாரத்தை கேந்திரம் உருவாக்கி வருகிறது. ஒரு ஆன்மிக புத்தெழுச்சியையும் இது ஏற்படுத்துகிறது. எம் வெளியீட்டு துறை பண்பாடு, தேசபக்தி, சமூக நல்லிணக்கம், ஆன்மீகம் ஆகிய பல துறைகளில் சிறப்பான பல வெளியீடுகளை பல தரப்பட்ட மக்களுக்காக வெளியிட்டு வருகிறது, கல்வியாளர்கள், குடும்பத் தலைவர்கள், தொழில் முறை வகுப்பினர், மாணவர்கள், பெண்கள், இல்லத்தரசிகள் என அனைத்து தரப்பினரையும் கவரக்கூடிய பல்வேறு தலைப்புகளில் அவர்களுக்கு முக்கியமான பல செய்திகளை கொண்டு செல்லும் வெளியீடுகள் கேந்திரத்தால் வெளியிடப்படுகின்றன.






# இராமேஸ்வரம் புனித நீர் தீர்த்தங்களை மீட்டெடுக்கும் செயல் திட்டம்

காஷ்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரை உள்ள அனைத்து இந்தியர்களுக்கும் ராமேஸ்வரம் என்பது ஒரு புனித தலமாகும். இங்கு தான் ஸ்ரீ ராமர் தீமையை வெற்றி கொண்ட பிறகு சிவபெருமானை வழிபட்டார் என்பது ஐதீகமாகும். இந்த புண்ணிய தீவு புனித தீர்த்தயாத்திரீகர்களின் தீர்த்த தலம் மட்டுமல்ல இந்த தேசத்தின் பண்பாட்டு ஆன்மிக ஒற்றுமையின் சின்னமும் கூட.




மகாத்மா காந்தி இந்த உண்மையை சுட்டிக்காட்டுகிறார். ராமேஸ்வரம் இந்திய ஆன்மிக பண்பாட்டு ஒற்றுமையின் சின்னமாக நம் முன்னோர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறுகிறார். உண்மைதான். இந்த புண்ணிய தீவு பல புனித தீர்த்த தலங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.



இந்த புனித நீர் தீர்த்த தலங்களே இந்த புனித தீவின் புண்ணிய நிலவரைவியல் (Sacred Geography) என்பதை உருவாக்குகின்றன. இந்த புனித தீர்த்த தலங்கள் குறித்த ஒரு அடிப்படை ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது இந்த தீர்த்தங்களில் 11 குளங்கள், 4 கிணறுகள், 1 கடல் நீராடும் துறை ஆகியவை உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய நிலையில் மிகவும் மோசமாக உள்ளன. சுற்றுச்சூழல் மாசு, கவனிக்கப்படாமை, பாழடைந்த நிலை என அவை அழிவின் மிக அருகாமையில் அல்லது பாதி அழிந்த நிலையில் உள்ளன. இவற்றை மீட்டெடுப்பது எவ்வாறு? ஏன்? இந்த புனித நீர்நிலைகளை மீண்டும் தூய்மையாக மீட்டெடுப்பதன் மூலம்

1. சூழலியல் நன்மைகள்
2. பண்பாட்டு மேன்மைகள் மற்றும்
3. சமூக பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை ராமேஸ்வரம் பெற இயலும்.




**சூழலியல் நன்மைகள்** – நிலத்தடி நீர் நன்கு பெருகும் என்பது ட ன் ராமேஸ்வரம் தீவில் நன்னீர் அமைப்புகள் அதிகரிக்கும் மழை நீர் சேகரிக்கும் களங்களாகவும் இவை பயனளிக்கும் என்பவை சூழலியல் நன்மைகள் மேலும் இந்த தீர்த்தங்களை ஒட்டி நந்தவனங்கள் அமைக்கப்படும் போது தாவர உயிரிப்பன்மையும் ஏற்படும்.

**பண்பாட்டு முக்கியத்துவம்** – இந்த தீர்த்தங்களுடன் இணைந்த கல்வெட்டுகள், சரித்திர முக்கியத்துவம் கொண்ட அம்சங்கள் இவற்றுடன் இணைந்த அங்கங்குள்ள சமுதாய மக்களின் வாழ்வியல் சடங்குகள் அவற்றின் பண்பாட்டு சின்னங்கள், கோவில்கள் ஆகியவை பாதுகாக்கப்படும். இல்லாவிட்டால் அவையும் இணைந்து அழிந்துவிடும்.



**சமூக பொருளாதார மேம்பாடு** – இந்த தீர்த்தங்களை மேம்படுத்துவதன் மூலம் இவை புனித யாத்திரிகர்களை ஈர்க்கும் சின்னங்களாகவும், இடங்களாகவும் அமையும். இதன் விளைவாக இங்கு வரும் புனித யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனால் நல்ல யாத்திரிகர் அனுபவச் சூழல் ஏற்படும். இதனால் ராமேஸ்வர தீவினில் வாழும் பல்வேறு தொழிற்சமுதாயங்கள் பயனடைவார்கள். உதாரணமாக 425 புனித யாத்திரை வழிகாட்டிகள். 65 தங்கும் விடுதி உடமையாளர்கள், 200க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டிகள், 300க்கும் மேற்பட்ட கோவில் பூசகர்கள் ஆகியோர் இதனால் பயனடையக்கூடிய தீவு வாசிகள் ஆவர்.



இவ்வாறு உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய தீர்த்தங்கள்தாம் எவை எவை?



- அக்னி தீர்த்தம்
- நகுல தீர்த்தம்
- சகாதேவ தீர்த்தம்
- திரௌபதி தீர்த்தம்
- ஹனுமான் குண்ட தீர்த்தம்
- நாக தீர்த்தம்
- அகஸ்திய தீர்த்தம்
- ஜடாயு தீர்த்தம்
- ராம தீர்த்தம்
- லக்ஷ்மண தீர்த்தம்
- அமிர்த வாபி தீர்த்தம்
- ருண விமோசன தீர்த்தம்
- மங்கல தீர்த்தம்
- சுக்ரீவ தீர்த்தம்
- அங்கத தீர்த்தம் மற்றும்
- ஜாம்பவான் தீர்த்தம்

இவற்றை எப்படி மீண்டும் தூய்மை படுத்தி யாத்திரிகர்கள் வரும் தலங்களாக்குவது?

இதற்காக செய்யப்பட வேண்டிய பணிகள் பின்வருமாறு

- சுற்றியிருக்கும் புல் புதர்கள் மண்டியிருக்கும் தாவரங்கள் அகற்றப்படும்.
- தூர்வாரப்படும்
- நீர் உள்ளே வரவும் வெளியே செல்லவும் இருக்கும் அமைப்புகள் சீர் செய்யப்படும்.
- சுற்றுச்சுவர்கள் சரி செய்யப்படும்
- மின்சார விளக்குகள் அமைக்கப்படும்
- பாரம்பரியமாக அந்த தீர்த்தத்துடன் தொடர்புடைய மரங்கள் அங்கு நடப்படும் அத்துடன் மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்படும்.
- அந்த தீர்த்தத்துடன் தொடர்புடைய கிராம தேவதை அல்லது இதிகாச தெய்வத்தின் கோவில்கள் சீரமைத்து புதுப்பிக்கப்படும்.
- அத்தீர்த்தம் குறித்த விவரங்கள் முக்கியத்துவம் அங்கே பிரதானமாக பெயர்பலகையுடன் வைக்கப்படும்.
- தீர்த்தங்கள் குறித்த விவரங்கள் முக்கியத்துவம் அடங்கிய புத்தகங்கள் புனித யாத்திரீகர்களுக்காக வெளியிடப்படும்.

ராமேஸ்வரத்தில் செய்யப்படும் இப்பணியானது ராமரது சேவையில் ஈடுபட்ட சேது பந்தன அணில் பணி போன்றதே என்பதை நாம் அறிவோம். ஆனால் இதனை மக்களே ஒரு மக்கள் இயக்கமாக வளர்த்தெடுப்பார்கள் என நாங்கள் நம்புகிறோம். சுவாமி விவேகானந்தரின் 150 ஆண்டு விழாவின் நினைவாக நம் வருங்கால சந்ததியினர் நம்மை குறித்து பெருமைப்படும் ஒரு முழுமையான தேச-தெய்வ-மக்கள் பணியை நாம் செய்தோம் எனும் பெரும் நிறைவையும் இது நமக்கு அளிக்கும்.



இப்பணியை ஏற்றெடுத்திருப்பது யார்? விவேகானந்த கேந்திரத்தின் ஒருங்கிணைந்த இயற்கை வள அபிவிருத்தி திட்டம் எனும் விகே-நார்டெப் மக்களுக்கான மக்களுடன் இணைந்த இயற்கை வள, வாழ்வாதாரங்களில் பாதுகாப்பு பணிகளையும் அவற்றை மேம்படுத்தும் பணிகளையும் செய்து வருகிறது. குறிப்பாக நீர் பாதுகாப்பு

# விவேகானந்த கேந்திரம் - நார்டெப்

மற்றும் மேலாண்மையில் விகே நார்டெப் ராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க பணி செய்துள்ளது. 1980களிலேயே இப்பகுதிகளில் மழைநீர் சேகரிப்பை வீடுகள் தோறும்




அறிமுகப்படுத்தியதுடன் மக்கள் சமூகங்கள் இணைந்த ஊருணி மீட்டெடுப்பை விகே நார்டெப் செய்துள்ளது. இந்த சேவைகளுக்காக மத்திய அரசு விகே நார்டெப் அமைப்புக்கு பூமி-ஜல்-புரஸ்கார் விருதை 2007இல் வழங்கியது. ஊருணிகள் கோவில் குளங்கள் ஆகியவற்றை மக்கள் சமூகங்களுடன் இணைந்து சீர்மைப்படுத்தி தூய்மைப்படுத்தி நீர் வள ஆதாரங்களை மேம்படுத்தும் பணியில் பெரும் வெற்றி கண்டுள்ளது விகே -நார்டெப்.








இந்த செயல் திட்டத்துக்கான முழு திட்ட செலவும் ரூ 1.50 கோடி ஆகும். இது நன்கொடைகளாக சேகரிக்கப்படும். இந்த செயல் திட்டம் தமிழ்நாடு அரசின் இதற்கு தொடர்புடைய அனைத்து இலாக்காக்களின் துணையுடன் செயல்படுத்தப்படும்.




விகே-நார்டெப் சுவாமி விவேகானந்தர் மீண்டும் தாய்நாட்டு தரையிறங்கிய ராமேஸ்வரத்தில் இந்த தீர்த்த நீர்நிலைகள் மீட்டெடுப்பு பராமரிப்பை உள்ளூர் மக்கள், மக்கள் அமைப்புகள், சமய அமைப்புகள் ஆகியவற்றின் மூலம் செய்ய திட்டமிட்டுள்ளது. அத்துடன் இது ஏதோ ஒரு ஆண்டில் செய்துவிட்டு, விட்டு செல்லும் பணியாக அல்லாமல் உள்ளூர் மக்கள் மூலம் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வரும் விதத்தில் அதை ஒரு சிறப்பான தொடர்ந்து இயங்கும் இயக்கமாக ராமேஸ்வர தீவின் அன்றாட வாழ்க்கையில் ஒரு அங்கமாக மாற்ற உத்தேசித்துள்ளது.




வாருங்கள் உங்களால் இயன்ற உங்கள் பங்களிப்பை இப்புனித பணியில் அளியுங்கள்.

**தொடர்புக்கு :**
செயலர்
**விவேகானந்த கேந்திர இயற்கை வள அபிவிருத்தி திட்டம் (விகே - நார்டெப்)**




விவேகானந்தபுரம்,கன்யாகுமரி - 629702
தமிழ்நாடு இந்திய தொலைபேசி எண் - 04652 246296
மின்னஞ்சல் - vknardep@gmail.com
இணைய தளம் - www.vknardep.org